**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO. SC. 63/2021**

**Deposition of P.W.** 2

Name : கார்த்திபன்

S/o, D/o, W/o : கங்காதர நாயர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.12.2024

Accused absent. Petition filed and allowed

<u>முதல் விசாரணை</u>–

நான் சுவாமியார்மடத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்குத் தெரியும். அ.சா.1ஐ தெரியும். மீன் வாங்க வந்ததில் விரோதம். சுமார் 5 வருடத்திற்கு முன்னர் இரவு 08.00 மணிக்கு சுவாமியார்மடம் மீன்கடையில் நிற்கும் போது எதிரிகள் தகாத வார்த்தைகள் பேசினார்கள். என்னையும், அன்சாரையும் அடிக்க வந்தார்கள். 1வது எதிரி மணிகண்டன் பீர்பாட்டிலால் என்னை வலது இடுப்பின் பக்கம் குத்தினார். அ.சா.1ஐ 2வது எதிரி திபு வயிற்றில் குத்தினார். குத்தி விட்டு எதிரிகள் சென்று விட்டார்கள். மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளது. தற்போது இல்லை. நான் ஆண்டு பட்டிகை வழக்கு எண். 115/2018ல் 3வதுஎதிரி என்றால் சரிதான். ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1391/2018ல் நான் 3வதுஎதிரி என்றால் சரிதான். ஆண்டு பட்டிகை வழக்கு எண்.339/2019 நான் 4வது எதிரி என்றால் சரிதான். கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற வழக்கு எண். 207/2024 ல் 2வது எதிரி என்றால் சரிதான். மீன் வாங்கும் போது விரோதம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். போலீசார் என்னை சம்பவ நாளன்று விசாரித்தார்கள். மீன் கடை தேசீய நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ளது என்றால் சரிதான். போலீசாரிடம் மீன்கடையில் வைத்து சம்பவம் நடந்ததாக சொன்னேன் என்றால் சரிதான். கறுப்பு கலர் பாட்டிலால் குத்தினார். பாட்டில் 2 அடி நீளம் இருக்கும். பாட்டிலை முழு பாட்டிலாக குத்தினார். என்னை குத்திய பிறகு தான் 15 நிமடங்கள் கழித்து அன்சாரை குத்தினார்கள். அன்சாரை சுவாமியார்மடம் ஒயின் ஷாப் அருகில் வைத்து குத்தினார்கள். மீன்கடையும் ஒயின் ஷாப்பும் பக்கத்தில் தான் உள்ளது. மீன்கடை ஒயின் ஷாப்பிற்கு கிழக்கு பக்க்ம உள்ளது. எனக்கு வயிற்றிலிருந்து ரத்தம் வந்தது. வெள்ளை பேண்ட், நீலகலர் சட்டை அணிந்திருந்தேன். சட்டையை போலீசாரிடம் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்த உடன் எனக்கு சுயநினைவு இல்லை. அன்சார் அவரது ரத்தம் பட்ட ஆடைகளை போலீசாரிடம் கொடுத்தாரா என்று எனக்குத் தெரியாது. ஒயின் ஷாப்பை தொட்டு பார் உள்ளது. சம்பவத்தை ஒயின் ஷாப் ஊழியர்கள் பார்த்தார்களா என்றால் கொஞ்சம் பேர் பார்த்தார்கள். சம்பவத்தை 20 பேர் பார்த்திருப்பார்கள். மெயின் ரோட்டிலிருந்து ஒயின் ஷாப் பிற்கு செல்லும் சாலை இறக்கமான கரடு, முரடான மண்சாலை என்றால் சரிதான். சாலையின் இருப்பக்கத்திலும்

உடைந்த பாட்டில்கள் கிடக்கும் என்றால் இல்லை. எனக்கு குடிப்பழக்கம் உள்ளது. சம்பவ நாளன்று நான் குடிக்கவில்லை. அன்சார் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி சென்ற போது நான் பின்னால் இருந்தேன் என்றும், இருசக்கர வாகனத்தில் இருந்து விழுந்து எனக்கும், அன்சாருக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.